**IDOP. No. 07/2025**
**Date :22.01.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)
PW 1 **திரு. செல்வம்**

**குறுக்கு விசாரணை :**

1. எதிர்மனுதாரர் எனக்கு திருமணத்திற்கு முன்பு உறவினர் என்றால் சரிதான், அவர் எனது அக்கா மகள். எதிர்மனுதாரர் மனநிலை சரியில்லாமல் இருந்ததாக நான் மனுவில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் குறித்து எவ்வித ஆவணங்களும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அவருக்கு மருத்துவ சிகிச்சை பார்த்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன், அவ்வாறு ஆவணங்கள் எதையும் நான் செய்யவில்லை என்றும், வழக்குக்காக தாக்கல் செய்ததாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

2. எதிர்மனுதாரர் மனநிலை சரியில்லாதவர் என்று பொய்யாக சான்றிதழ் உருவாக்க வேண்டும் என்பதற்காகவே நான் ராணுவத்திலிருந்து விருப்ப ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவரது பெற்றோர்கள் போட்ட நகைகள் அனைத்தையும் வாங்கி நான் இன்றளவும் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல, எதிர்மனுதாரர் அந்த நகைகளை வாங்கிச் சென்றுள்ளார். தனியார் வங்கிகளில் எதிர்மனுதாரர் தன்னிச்சையாக அடமானம் வைத்ததாக கூறுவது பொய் என்றும், நான், தான் ஆன்லைனில் கடன் விண்ணப்பம் செய்து அதன் பிறகு அவரது நகைகளை வைத்து அடமான கடன் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே நான் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கானது என்னால் வாபஸ் வாங்கப்படவில்லை என்றும், அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

3. எதிர்மனுதாரரின் நலன் கருதி அந்த வழக்கானது நான் வாபஸ் வாங்கினேன். நான் தான் எதிர்மனுதாரரை சென்னையிலுள்ள எனது நண்பர்

வீட்டுக்கு பஸ் ஏற்றி அனுப்பி வைத்து மூன்று நாட்கள் அவரே சென்னையில் இருக்க வைத்தேன் என்றால் சரியல்ல. அதன் பிறகு எதிர்மனுதாரர் காணாமல் போனதாக பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என் மனைவியை நானாகவே கண்டுபிடித்து விட்டதாக போலீசாரிடம் சொல்லி அவர்களை சென்னைக்கு அழைத்து சென்று அங்கிருந்து எனது மனைவியை அழைத்து வந்தேன் என்றால் சரியல்ல.

4. காவல் நிலையத்தில் இது பற்றி விசாரித்தபோது எனது மனைவி நான் அனுப்பி வைத்தததால் தான் அவர் சென்னைக்கு சென்றதாக எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சிறிது காலம் அவரது பெற்றோர் வீட்டில் எதிர்மனுதாரர் இருக்க வேண்டுமென்று என்பதற்காகவே காவல் அதிகாரிகள் எதிர்மனுதாரரை அவரது பெற்றோர் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரியல்ல. கடந்த 1 வருடம் 2 மாதமாக எதிர் மனுதாரர் அவரது குழந்தையை பார்ப்பதற்கு முயற்சி செய்தும் நான் அவரை அனுமதிக்காமல் மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது மனுவில் முதல் விசாரணையிலும் நான் விவாகரத்து கேட்பதற்கான சட்டவிதமான காரணங்கள் எதையும் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

5. நான் சொல்லியுள்ள காரணங்கள் எதுவும் விவாகரத்து கொடுப்பதற்கான முகாந்திரம் இல்லை என்பதால் எனது விவாகரத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மனநிலை சரியில்லாதவர் என மட்டுமே நான் தெரிவித்து இருக்கிறேன் என்றும் அது சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவராகவே நகைகளை எடுத்துச் சென்று அடமானம் வைத்ததாக கூறும் குற்றச்சாட்டை மெய்ப்பிக்க எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பே நான் புதுப்பட்டியைச் சேர்ந்த காமராஜர் என்பவரது மகள் திருமதி.வைரமணி என்பவரை நான் சட்டத்திற்கு

புறம்பாக இரண்டாவது திருமணம் செய்த என்னுடன் அழைத்து வந்து வைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அவர் ஏற்கனவே திருமணமானவர் என்றும், அவரது இரண்டு குழந்தைகளையும் நான் என்னுடன் அழைத்து வந்து வைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த காரணத்திற்காக தான் நான் எதிர்மனுதாரரை விவாகரத்து செய்ய வேண்டும் என்ற காரணம் கூறி சட்டத்திற்கு முரணாக ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்கள் எதுவும் சொல்லாமல் இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

1. எனது மனைவிக்கு 2015–ம் ஆண்டிலிருந்து உடல்நிலை சரியில்லை. நான் ராணுவத்தில் பணிபுரியும்போது எதிர்மனுதாரர் அவராகவே தன்னிச்சையாக பேசிக்கொண்டு சுவற்றில் முட்டிக் கொள்வார். நான் அவரது உடல்நிலை தொடர்பாக எந்த மருத்துவரிடம் சிகிச்சைக்கு அழைத்துச் சென்றேனென்றால் அது பற்றிய விவரங்கள் என்னால் யோசித்து தான் சொல்ல முடியும், தற்போது சொல்ல முடியாது.

2. 2015–ம் ஆண்டு முதல் 2025–ம் ஆண்டு வரை சுமார் 10 ஆண்டுகள் எதிர்மனுதாரர் என்னுடன் தான் குடியிருந்து வந்தார். நான் 5–6 முறை அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருக்கிறேன். அவரது சகோதரி தான் அவரை மருத்துவமனைக்கு மற்ற நேரங்களில் அழைத்து செல்வார். 2015 ம் ஆண்டு முதல் 2025ம் ஆண்டு வரை சமைப்பது வீட்டை பராமரிக்கும் வேலைகளை எதிர் மனுதாரர் செய்து வந்தாரா என்றால் அவர் மாத்திரை போட்டுவிட்டு தூங்கிக் கொண்டுதான் இருப்பார்.

3. நான் தான் வீட்டு வேலைகளையும், சமையல் வேலைகளையும் செய்வேன். அவர் 11 – 12 மணிக்கு தான் காலையில் எழுந்திருப்பார். எனது மகளை மட்டும் அவர் தயார் செய்து அனுப்புவார், மற்றபடி அவர் தூங்க சென்று விடுவார். எதிர்மனுதாரருக்கு உணவுகளை நான் எடுத்துக் கொண்டு போய்

கொடுப்பேனா என்றால் அவராகவே போட்டு சாப்பிட்டுக் கொள்வார். இரண்டு வேளை சமையல் செய்வதும் நான் தான். எதிர்மனுதாரரின் துணிகளையும் நான் தான் துவைத்து காயவைத்து மடித்து கொண்டு வந்து வைப்பேன். வீட்டுக்கு நான் வேலைக்கா வந்திருக்கிறேன் என்று என்னுடன் அவர் சண்டை போடுவார், துணிகளை துவைக்க மாட்டார்.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.22 15:52:35 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.